# கேரள - தமிழக மேல்நிலைப்பள்ளி தமிழ்ப் பாடத்திட்டம் - ஓர் ஒப்பீடு

**By**

**பால்ராஜ்., ரா.**

*முதுமுனைவர் பட்ட ஆய்வாளர், தமிழ்த்துறை, கேரளப் பல்கலைக்கழகம், திருவனந்தபுரம், கேரளா, இந்தியா.*

**ஆய்வுச்சுருக்கம்**

*தமிழ் பாடநூல் கேரள மற்றும் தமிழகத்தில் எவ்வாறு அமைந்திருக்கிறது என்பதைக் பார்க்கும்போது கற்றல் என்னும் செயல் தனி மனித மேம்பாட்டிற்கும் சமூக நலனுக்கும் அடிப்படையானது. இது இலக்கிய மொழிக் கல்விக்கும் பொதுவானதாகும். மொழிக்கல்வி சுவைபட அமைய வேண்டும் என்பது பொதுவிதியாக சொல்லினும் அது மக்களின் பண்பாடு வரலாறு சார்ந்த ஒழுக்க விழுமியங்களின் சேர்க்கை என்பதை அடிநாதமாக கொண்டு இயங்கக்கூடியதாக அமைய வேண்டும். இவற்றை உள் முகமாக வைத்தே பாடத்திட்டங்கள் அமைக்கப்படுகின்றன. சமூகத்தின் தேவையை உணர்ந்து முதன்மைக் கற்றல் அடைவுகள் துணைமைக் கற்றல் அடைவுகள் என கூறுகளாகக் பகுக்கப்பட்டு அதனுடன் ஒன்றிய விடைகளை எழுப்பி செயல்பாடுகளாக மாணவர்களிடம் கொண்டு சேர்க்கின்றன. இதன் விளைவுகளாக தம் சமூகத்தில் மேம்பாடுகளை உணர்ந்து எதிர்காலத்தில் கட்டமைக்கப்பட வேண்டிய கூறுகளை மாணவர்களிடம் வளர்ப்பதே பாடத்திட்டங்களாகும்.*

***கலைச்சொற்கள்:*** *வெள்ளம் - தண்ணீர், வெள்ளாமை - விவசாயம், சம்சாரம் - உரையாடல் பிராயம் - வயது*

## முன்னுரை

தென்னிந்தியாவை பொறுத்த அளவில் மிகுதியாகத் தமிழ் மொழி பேசப்படும் மாநிலங்களான தமிழ்நாடு மற்றும் கேரள ஆகியன சிறந்த முறையில் உலகுக்கும், மாணவ செல்வங்களுக்கும் அறிமுகப்படுத்துகின்றன என்பதை கேரள தமிழக மேல்நிலைப்பள்ளி தமிழ் பாடத்திட்டத்தின் வழியாக நன்கு அறிய முடிகிறது.

நம் எண்ணங்களை பிறருக்கு தெரிவிக்கவும் பிறருடைய உணர்வுகளை நாம் புரிந்து கொள்ளவும் உதவுவது மொழியே ஆகும். நாகரீக வளர்ச்சிக்கு ஏற்ப பேச்சுவழக்கு மொழிகளெல்லாம் எழுத்து வடிவம் பெற்றன. காலத்தால் பழமையான ஆதிகால மனிதனின் அற்புத மொழியாக தமிழ்மொழி திகழ்கின்றது.

## தமிழ் மொழியின் சிறப்பு

திராவிட மொழி குடும்பத்தைச் சார்ந்த தமிழ்மொழி, காலங்கள் மாற்றம் அடைந்தாலும் உலகின் கண்டங்கள் பல அழிந்து இருந்தாலும் என்றென்றும் அழியாத செல்வமாய் விளங்குகிறது தமிழ்மொழியே. தமிழ் மொழியானது தமிழ் பேசும் அனைவருக்கும் தாய்மொழியாக சிறந்து விளங்குகிறது. தமிழ் மொழியானது 2500 ஆண்டுகளுக்கும் மேல் பழமை வாய்ந்த இலக்கிய மரபினை கொண்டுள்ள நூல் என்று சொல்லப்படுகிறது. தமிழ் என்னும் சொல்லின் பொருளுக்கு இனிமை, எளிமை, நேர்மை என்று பொருளாகும். தமிழ் மொழியானது இந்தியாவில் மட்டுமல்லாமல் பிற நாடுகளிலும் (இலங்கை,சிங்கப்பூர்) ஆட்சி மொழியாகவும், பேசப்படும் சிறந்த மொழியாக தமிழ் மொழி உள்ளது.

**தமிழ் பாடத்தின் நோக்கம்**

கல்வி என்பது அறிவு தேடலுக்கான பயணம் மட்டுமல்ல; எதிர்கால வாழ்விற்கு அடித்தளம் அமைத்திடும் கனவின் தொடக்கமும் கூட. அதே போன்று பாடநூல் என்பது மாணவர்களின் கைகளில் வாழும் ஒரு வழிகாட்டி மட்டுமல்ல; அடுத்த தலைமுறை மாணவர்களின் சிந்தனைப் போக்கை வடிவமைத்திடும் வல்லமை கொண்டது. பெற்றோர் ஆசிரியர் மற்றும் மாணவர்களின் வண்ண கனவுகளை குழைத்து ஓர் ஓவியம் தீட்டவும் பாடத்திட்டம் இன்றியமையாத ஒன்றாகும்.

- கற்றல் மனனத்தின் திசையில் இருந்து மாற்றிப் படைப்பின் பாதையில் பயணிக்க வைத்தல்.
- தமிழர் தம் தொன்மை, வரலாறு பண்பாடு மற்றும் கலை இலக்கியம் குறித்த பெருமித உணர்வை மாணவர்கள் பெறுதல்.
- தன்னம்பிக்கையுடன் அறிவியல் தொழில்நுட்பத்தைக் கைக்கொண்டு மாணவர்கள் நவீன உலகில் வெற்றிநடை பயில்வதை உறுதிசெய்தல்.
- அறிவுத் தேடலை வெறும் ஏட்டறிவாகக் குறைத்து மதிப்பிடாமல் அறிவுச் சாளரமாய்ப் புத்தகங்கள் விரிந்து பரவி வழிகாட்டுதல்.
- தோல்வி பயம் மற்றும் மன அழுத்தத்தை உற்பத்தி செய்யும் தேர்வுகளை உருமாற்றி, கற்றலின் இனிமையை உறுதிசெய்யும் தருணமாய் அமைத்தல்.

புதுமையான வடிவமைப்பு ஆழமான பொருள் மற்றும் குழந்தைகளின் உளவியல் சார்ந்த அணுகுமுறை எனப் புதுமைகள் பல தாங்கி நிற்கக்கூடிய பாடத்திட்டத்தை வடிவமைத்து புத்தகங்களாக கொடுப்பதே சிறந்ததாகும்.

**கேரள - தமிழக மேல்நிலைப்பள்ளி தமிழ்ப் பாடத்திட்டம் ஓர் ஒப்பீடு**

பாடத்திட்டம் என்பது மாணவர் மற்றும் ஆசிரியர் இணைந்து பணியாற்றக் கற்றுக் கொள்ளும் அடித்தளத்தைக் குறிக்கிறது. பாடத்திட்டமானது மாணவர்களுக்கு நடைமுறை அறிவு, பயிற்சிக்கான அறிவு மற்றும் அவர்களின் சொந்த நடைமுறை மற்றும் பிறவற்றை விமர்சன முறையில் பிரதிபலிக்கும் திறனாய்வு திறன் ஆகியவற்றை வளர்க்க உதவ வேண்டும்.

பாடத்திட்டம் மாணவச் செல்வங்களை பல நிலைகளில் உயர்த்திப் பிடிக்க உதவுகின்றது. அந்த வகையில் தமிழ்நாட்டு பாடத்திட்டத்தின் அமைப்பு முறையை பார்க்கும் போது அதன் உண்மைத் தன்மை புலனாகின்றது. அறிவியல் தொழில் நுட்பங்களால் இந்தியா வளர்ச்சியடையும் போது ஒவ்வொரு பள்ளி மாணவர்களும் அதை உணர வேண்டும் என்பதற்காக பல நிலைகளில் (அலகுகளில்) பாடத்திட்டங்களை பிரித்தும், சேர்த்தும் தொகுத்தும் அதன் அடிப்படையில் அமைந்திருப்பதை தமிழ்ப் பாடத்திட்டத்தைப் பார்க்கும்போது அறியமுடிகிறது. மாணவச் செல்வங்களுக்கு புத்தகங்கள் என்பது மதிப்பெண் வாங்கக்கூடிய கருவியாக மட்டுமல்லாமல் சிந்தனையை வளர்க்கவும் (தூண்டவும்), சமூக செயல்பாட்டில் பங்கு கொள்ளவும் போட்டி தேர்வுகள் மற்றும் நுழைவுத் தேர்வுகளை எளிமையாக எதிர்கொள்ளும் வகையில் தற்காலத் தமிழ்ப்பாடத்திட்டம் அமைந்திருக்கிறது. பழமையைப் போற்றி கைவிடாமலும், தமிழ்நாட்டு கலாச்சார பண்பாடுகளை மிளிர வைக்கும் தல புராணத் திருத்தளங்களை அடையாளப்படுத்தியும், மொழித் தேவையின் இன்றியமையாமையை இலக்கணம் மூலமாகவும் தற்கால நிகழ்வுகளை கதையாகவும்,

நாவலாகவும் பாடத்திட்டத்தில் உட்படுத்தி சிறப்பித்து இருப்பதை பார்க்க முடிகிறது. இருந்தாலும் கேரள தமிழக பாடத்திட்டங்கள் ஒவ்வொன்றும் மாணவ செல்வங்களின் மனநிலையைச் சமூகத்தோடு வளர்த்துக் கொண்டு போகக்கூடிய சூழல் இருந்தாலும் இரண்டு மாநிலத் தமிழ்ப் பாடத்திட்டத்திலும் சிற்சில வேறுபாடுகள் நிலத்தைப் பொருத்தும் சூழ்நிலைகளைப் பொருத்தும் மாறுபடுவதை இக்கட்டுரையின் வாயிலாக அறிய முடிகிறது.

**தமிழ்நாட்டுப் தமிழ்ப் பாடத்திட்ட அமைப்பு முறை**

- ♣ தமிழ்நாட்டுப் பாடத்திட்டத்தில் செய்யுள், உரைநடை, துணைப் பாடம், இலக்கணம் போன்ற நிலைகளில் வடிவமைக்கப்பட்டுள்ளது.
- ♣ மனப்பாடத்திற்கும் தமிழிற்கும் (மொழித்திறன்) கூடுதல் முக்கியத்துவம் கொடுப்பதை காண முடிகிறது.
- ♣ ஒவ்வொரு பாடத்தின் இறுதியிலும் மொழியை மேம்படுத்தவும், மாணவர்களின் கற்றல் திறனை வளப்படுத்தவும் பல்வேறு விதமான செயல்பாடுகளைக் காணமுடிகின்றன. அவை பின்வருமாறு வரையறுக்கப்படுகின்றன.
- ♣ நுழையும் முன்
- ♣ நம்மை அளப்போம்
- ♣ நூல்வெளி
- ♣ கற்பவை கற்றபின்
- ♣ தெரிந்து கொள்வோம்
- ♣ தெரியுமா?
- ♣ மொழியை ஆள்வோம்
- ♣ தமிழாக்கம் தருக
- ♣ இலக்கிய நயம் பாராட்டுக
- ♣ மொழியோடு விளையாடு
- ♣ நிற்க அதற்குத் தக
- ♣ படிப்போம், பயன்படுத்துவோம்
- ♣ அறிவை விரிவு செய்
- ♣ இணையத்தில் காண்க
- ♣ இணையச் செயல்பாடு

(“குறிப்பு” - மேல்நிலை இரண்டாம் ஆண்டு, பள்ளிக் கல்வித்துறை, பொதுத்தமிழ், தமிழ்நாடு, பக்கம்-18,19,20,21,22.)

**கேரளத்தில் தமிழ்ப் பாடத்திட்ட அமைப்புமுறை**

கேரள மாநிலம் என்பது மலையாளத்தை தாய்மொழியாகக் கொண்ட தமிழகத்தின் அண்மை மாநிலமாகும். இங்கு தமிழகத்தைப் போன்று அடி முடி மாற்றமில்லாமல் கலாச்சாரப் பண்பாடுகளை தாங்கி நிற்கக்கூடிய ஏராளமானப் பகுதிகளைப் பார்க்க முடியும். தமிழைத் தாய்மொழியாகக் கொண்ட மக்கள் தமிழை முதன்மைப்பாடமாகவும், சிறப்புப் பாடமாகவும் (Elective) எடுத்துப் படிக்கக் கூடிய நிலை இங்கு இருக்கிறது. அந்த வகையில் கேரளத்தின் தமிழ்ப் பாடத்திட்ட அமைப்புமுறை தமிழகத்தை ஒப்புமைச் செய்யும் போது பல நிலைகளில் மாறுபட்டு இருப்பதை காணமுடிகிறது. இங்குள்ள எழுத்தாளர்கள் மற்றும் பாடத்திட்டக் குழுவினர் மலையாள நாட்டில் வாழ்வதால் தங்களை அறியாமலே மலையாள மொழி சில இடங்களில் பேசுவதற்கும், எழுதுவதற்கும் பயன்படுத்துகின்றனர். அந்த சூழல் தமிழ்ப் பாடத்திலும் ஆங்காங்கு சில இடங்களில் பதிவாகியிருப்பதை பாடபுத்தகத்தின் வாயிலாகவும், மேலும் பல நிலைகளில் பாடத்திட்டம் மாறுபட்டு இருப்பதை கீழே கொடுக்கப்படுகின்றன.

- கேரளத் தமிழ்ப் பாடத் திட்டத்தில் சமூகக் கல்விக்கு முக்கியத்துவம் கொடுப்பதாகவும், மாணவர்களின் மனனச்சுமையைக் (மனப்பாடம்) குறைப்பதாகவும் இருப்பதைக் காணமுடிகிறது.
- மொழிக்கலப்பு இருக்கிறது. (மே.இ.ஆ-தமிழ்-கேரள பக்-11,16)
- பாடப் புத்தகத்தில் உள்ள பக்கங்களின் எண்ணிக்கையை தமிழகத்தோடு ஒப்பிடும் போது மிக குறைவாகவே உள்ளது. (சுமையைக் குறைப்பதற்காக பாடப்புத்தகத்தை காலாண்டு வரை ஒரு புத்தகமும், அதற்கு அடுத்து ஒரு புத்தகமாகவும் (பாகம்-1,2) பிரித்துக் கொடுத்திருப்பதைப் பார்க்க முடிகிறது.
- கேரளத்தமிழ் எழுத்தாளர்களுக்கு முக்கியத்துவம் கூடுதலாக இருக்கின்றது.
- செயல்பாடுகள் மிககுறைவாகவும், அதிலும் குழு செயல்பாடுகளுக்கு முக்கியத்துவம் இருப்பதாகவும் பார்க்க முடிகிறது.
- இலக்கணங்களில் தொடர்ச்சி ஒரே பாடத்தில் முடியாமல் அடுத்த பாடத்திற்கு நீண்டு போகிறது.
  மேனிலை இரண்டாம் ஆண்டு தமிழ், கேரளம் (76,40,87)
- பாடப்புத்தகத்தில் அச்சுக் பதிப்பானாது சில இடங்களில் சரிவர அமையாத நிலையில் இருக்கின்றது.
- கேரள பாடத்திட்டத்தில் மறுமலர்ச்சி நாயகர்களுக்கு முக்கியத்துவம் கொடுக்கப்பட்டுள்ளது.

### பாடத்திட்டத்தின் பயன்கள்

1. கால வரையறையை நிர்ணயிக்கப் பயன்படுகிறது.
2. பல்வேறு மொழி வடிவங்களுக்கு மதிப்பளித்தல் மற்றும் தெரிந்து கொள்ளுதல்.
3. ஆசிரியர்களுக்கு வழிகாட்டியாக இருக்கின்றது மற்றும் கற்பிக்கப்படும் தலைப்பில் ஆசிரியரின் கவனத்தைத் தக்க வைக்க உதவுகிறது.
4. வகுப்பறையில் கற்றல் மற்றும் கற்பித்தல் செயல்முறையை மேம்படுத்துவதற்கான ஒரு முயற்சி ஆகும்
5. மாணவர்களின் தேர்வு அச்சத்தைக் பாடத்திட்டம் குறைக்கிறது
6. மாணவர்கள் மொழியை செம்மையாக பேசுவதற்கும் எழுதுவதற்கும் பாடத்திட்டம் உதவுகிறது.
7. குறிப்பிட்ட காலங்களில் தேவையான தகவல்களை மாணவர்களுக்கு புரிந்து கொள்வதற்கு ஏற்ப பாடத்திட்டம் அமைகிறது.

### முடிவுரை

கேரள தமிழகத் தமிழ்பாடத்திட்டம் பல்வேறு நிலைகளில் மாறுபட்டு இருந்தாலும் ஒவ்வொருபாடத்திட்டமும் அந்தந்த மாநிலங்களின் ஆசிரியர் மற்றும் மாணவர்களின் நலன் கருதி அமைந்து இருப்பதை கட்டுரையின் வழியாக பார்க்க முடிகிறது. மேலும் அந்தந்த நிலங்களின் கலாச்சாரப் பண்பாடுகளை மற்றும் சுற்றுலாக்களை முதன்மைப்படுத்தி பாடத்திட்டத்தை அமைப்பதைப் பார்க்க முடிகிறது. மாணவர்கள் மொழி வளர்ச்சியில் உயர வேண்டும் என்பதற்காக பல்வேறு திட்டங்களை அந்தந்த அரசு அமல்படுத்தி வருவதையும் காண முடிகிறது.

## பார்வை நூல்கள்


கே. இரா. கமலாமுருகன் - தமிழ் இலக்கிய வரலாறு, கௌரா பதிப்பகம், 2008.

பொதுத்தமிழ் மேல்நிலைப்பள்ளி, பள்ளிக் கல்வித்துறை, தமிழ்நாடு அரசு, தமிழ்நாடு, 2016.

தமிழ்ப்பாடநூல், மேல்நிலைப் பள்ளி, கல்வித்துறை, கேரளா அரசு, மாநிலக் கல்வியாராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனம் (SCERT), 2018.

தமிழ் இணையதளம்.


## To cite this article

*****************

Paulraj, R. (2023). கேரள - தமிழக மேல்நிலைப்பள்ளி தமிழ்ப் பாடத்திட்டம் ஓர் ஒப்பீடு. *Sparkling International Journal of Multidisciplinary Research Studies, 6*(4), 30-34.

*******************************************************************************************

## ABOUT THE AUTHOR




***Paulraj R.** is a Post Doctrol fellow, under the guidance of Dr.Hepsy Rose Mary A. in the Department of Tamil, University of Kerala, Kariavattom campus, Thiruvananthapuram. He got his B.A. & M.A degree in Tamil Language and Literature from Calicut University and got M.Phil from Kerala University. He has published research papers in UGC care listed journals and regularly participated and presented papers in the National and International Seminars. He was the first Degree holder in his family.*


*******************************************************************************************